IN THE COURT OF THE PRINCIPAL SUBORDINATE JUDGE'S HOSUR.

MCOP –301/2025 Date – 17.07.2025

PW. 1 –சக்திவேல்

2025ம் ஆண்டு ஜுலை மாதம் 17ம் நாள் சக்திவேல் என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டின் 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு. பொ. சண்முகராஜ், எம். எல்., நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சக்திவேல் | தந்தை பெயர் | ராஜீ |
| வயது | 24 | கிராமம் | கம்மம்பட்டி |
| வட்டம் | தோப்பூர் | மாவட்டம் | தர்மபுரி |

<u>முதல் விசாரணை:–</u>

நான் மனுதாரர் ஆவேன். எனது தரப்பு முதல் விசாரணைக்காக வழக்கறிஞர் முன்னிலையில் கையொப்பம் செய்த பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தை படித்துப்பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் கூறியுள்ள விவரங்கள் சரியானவை, அதில் கூறியுள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள அதே வரிசையில்

| | | |
|---|---|---|
| ExP1 | | முதல் தகவல் அறிக்கை – உண்மை நகல் |
| ExP2 | | கங்கா மருத்துவமனையின் டிச்சார்ஜ் சம்மரி – அசல் |
| ExP3 | | கங்கா மருத்துவ மனை டிஸ்சார்ஜ் சான்று – அசல் |
| ExP4 | | CT Abdomen contrast report – Original |
| ExP5 | | Bunch Medical Bills – Original |
| ExP6 | | Registration certificate of motor cycle – Original |

| | | |
|---|---|---|
| ExP7 | | Insurance policy – Xerox copy |
| ExP8 | | Aadhar card – Compared with original |
| ExP9 | | Pan card – Compared with original |
| ExP10 | | Provisional Certificate – Compared with original |
| ExP11 | | Convocation for his Diploma course – Xerox copy |
| ExP12 | | செல்வகுமரன் ஓட்டுனர் உரிமம் |
| ExP13 | | என்னுடைய ஓட்டுனர் உரிமம் |
| ExP14 | | விபத்திற்குள்ளான வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வு அறிக்கை |

**மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.**

**குறுக்கு விசாரணை:**

புகார் யார் கொடுத்தார் என்றால் பூவிழி ஆகும். அவர் எனக்கு உறவினர் இல்லை. என் பின்னால் அமர்ந்து வந்த செல்வகுமாரின் சகோதரி ஆவார். அவரும், நானும், செல்வகுமாரும் ராஜசீரிய நிறுவனத்தில் பணியாற்றுவதாக சொல்லியுள்ளார் என்றால் சரிதான். நான் நிறுவனத்தில் பணிபுரியும் போது தான் விபத்து ஏற்பட்டது. எதிரே வந்த அடையாளம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். அடையாளம் தெரியாத வாகனத்தை இன்னும் கண்டுபிடிக்கவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகன உரிமையாளர் எனது நண்பர் ஆவார். அவரது வாகனத்தை நான் ஓட்டி செல்லும் போது தான் விபத்து என்றால் சரிதான். எனக்கும், பிரகாஷ்க்கும் வேறு எந்த உறவு, முறையும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய ஆஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டுள்ளதால் நான் எந்த வித பண பலன்களும் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த மனு மோட்டார் வாகன சட்ட விதிகளுக்கு எதிராகவும், காப்பீட்டு விதிகளுக்கு மாறாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் நிலைக்க தக்கது இல்லை என்றால்

சரியல்ல. இந்த விபத்தின் காரணமாக எனக்கு நிறந்தர ஊனம், செயல் திறன் பாதிப்பு வருமான இழப்பு ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் கங்கா மருத்துவ மனையில் சிகிச்சை எடுத்து கொண்டேன். மருத்துவ செலவாக குறிப்பிட்டுள்ள ரூ.2,56,527/- பெற முடியாது என்றால் சரியல்ல. மேற்படி மருத்துவ பில்களை சம்மந்தப்பட்ட மருத்துவர் தான் உறுதிப்படுத்த முடியும் என்றால் சரியல்ல. கோரியுள்ள மனு தொகை மற்றும் வட்டி அதிகம் என்றால் சரியல்ல. தனக்கு தானே ஏற்படுத்திக் கொண்ட விபத்திற்கு நஷ்ட ஈடு கோர முடியாது என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்டு 25 கழித்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை: இல்லை.**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Sd/P.Shunmugaraj, M.L.,
Principal Subordinate Judge,
Hosur